1992 ஏப்ரல் 10]

4. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஐந்தாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.00

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா மீதான உரிமைக் குழு அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"8—4—1992 ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா ' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229 (ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானம் நிறைவேறியதையொட்டி அடுத்து I will take necessary steps to summon Thiru. Anil Dharkar, Editor and Publisher of 'Illustrated Weekly of India' and Thiru K. P. Sunil, the then columnist, to the Bar of this House to carry out the sentence pronounced upon them by the House. இதற்கான மொழி பெயர்ப்பையும் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

பேரவை முன்னவர் அவர்கள் 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' பற்றி உரிமை மீறல் பிரச்சினையின் மீது பேரவைக்கு உரிமைக் குழு அளித்த அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பேரவை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து நான் அந்த 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' என்னும் பத்திரிகையின் ஆசிரியரும், வெளியீட்டாளருமான அனில் தர்கர் என்பவரையும் அந்தப் பத்திரிகையில் அந்த குறிப்பிட்ட கட்டுரையை எழுதிய கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் என்பவரையும் இந்த அவையில் கூண்டுக்கு ஆஜராகுமாறு 'சம்மன்' செய்து இங்கே அந்த கூண்டிலே ஏற்றிவிட்டு, பேரவை வழங்கிய தண்டனையை நிறைவேற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குரிய கூண்டு தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தக் குறிப்பிட்ட நாளில் இங்கே கொண்டு வந்து அது நிறுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

1992 ஏப்ரல் 10]

(ஆ) மதிப்பீட்டுக் குழு — உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின்கீழ், 1992-93ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும் ''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(இ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 203-வது விதியின் கீழ், 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும். ''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஈ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்ந் தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 211–வது விதியின் கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி 16 உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாள் அன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

1992 ஏப்ரல் 10]

(உ) உரிமைக்குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவிற்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227-வது விதியின் கீழ் 1992–93 ஆம் ஆண்டிற்கு, நிதியாண்டிற்காக உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி 14 உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாள் அன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

6. அறிவிப்பு.

குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Untertakirgs), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 20 ஆம் நாள், திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்